ISBN. 978-93-5996-390-7

# எட்டுத்தொகையில் ஏற்றம் பெறும் மட்பாண்டங்கள்.

**ச.ராஜலட்சுமி, முனைவர் க.கமலா**

Date of submission : 2025-06-15 Date of acceptance : 2025-06-21
Date of Publication: 2025-08-2
Corresponding auther's Name :Dr.K.Kamala
Email : kamala.sl@velsuniv.ac.in

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தின் மணிமுடியாக அரிய கருவூலங்களாக வற்றாத செல்வங்களாகத் திகழுகின்ற நம் சங்கஇலக்கியங்கள். தமிழரின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் இலக்கிய வளங்களையும், இயற்கை, அறிவியல், வரலாறு மற்றும் வாழ்க்கை நெறிகளையும் உணர்த்தும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

இவ்விலக்கியங்கள் தமிழரின் காதல், வீரம், ஒழுக்கம், கலை, தொழில், விருந்தோம்பல் ஆகிய வாழ்வியல் முறைகளையும் வாழ்வியலின் வளர்ச்சிக்கான கூறுகளையும் உள்ளங் கனி நெல்லிக்கனி போல் எடுத்துரைக்கும் ஈடற்ற அருஞ் செல்வமாகும். தமிழினத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும் சங்க இலக்கியத்தில் குறிப்பாக

எட்டுத்தொகையில் படைப்பு உலகின் பிரம்மாக்களாக விளங்கக்கூடிய குயவர்களும் அவர்கள் படைத்தளித்த மட்பாண்டங்களும் எவ்வகையில் இடம்பெற்றிருக்கின்றன என்பதைப் பற்றி கட்டுரையில் காண்போம்.

**நற்றிணையில் நம் குயவர்**

சங்ககாலம் முதல் இன்று வரை சமூகத்தில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளில் முக்கிய அங்கம் வகிப்பவர்கள் குயவர்களே.

குயவர்களின் கைவண்ணம் எல்லா இடங்களிலும் தேவை என்பதை நற்றிணை நமக்கு நன்கு உணர்த்துகிறது.

**விழாக்களும் வேண்டுதலும்**

**"கண்ணி கட்டிய கதிர் அன்ன**
**ஒண்குரல் நொச்சித் தெரியல்சூடி**
**யாறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்**
**'சாறு'என நுவலும் முதுவாய்க் குயவ**

ச.ராஜலட்சுமி,முனைவர் பட்ட ஆய்வாளர் முனைவர் க.கமலா, நெறியாளர் பேராசிரியர்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லவரம்,சென்னை -600117.

ISBN. 978-93-5996-390-7

**ஈதும் ஆங்கண் நுவன்றிசின் மாதோ (நற். 200)**

எனும் பாடலில் குயவன் ஊரில் திருவிழா நிகழ்வதை அறிவிக்கத் தலைபடுகின்றான். அவனைத் தோழி அழைத்துத் தலைவனின் வாயிலாகப் பாணனின் பொய் மொழியை ஊர்முழுக்க அறியுமாறு கூறுக, என்று கூறுவதன் மூலம் சமூக நிகழ்வுகளில் குயவர்களின் பங்கினை அறிய முடிகிறது. மேலும்,

**"மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி**
**பலிக்கள் ஆர்கைப்பார் முதுகுயவன்**
**இடு பலி நுவலும் அகன்தலை மன்றத்து**
**விழவுத் தலைக்க கொண்ட பழவிறல் மூதூர் " (நற்-293)**

எனும் பாடலில் நீலமணிபோலும் பூங்கொத்துக்களைக் கொண்ட நொச்சி மாலையைச் சூடிப் பலிகளை இடுகின்ற செயல்புரியும் கையினையுடைய மிக முதிய குயவன் தான் இடுகின்ற பலியை உண்ணுதற்காகத் தெய்வங்களையும் காக்கைகளையும் அழைப்பான்.

இவற்றைக் கொண்டு ஆராய்கையில் சங்க காலத்தில் குயவர்களே விழாநிகழ்த்தும் உரிமை பெற்றிருந்ததையும் அவற்றை ஊரில் அறிவிக்கும் பொறுப்பு உடையவர்களாகவும் பல்வேறு சடங்குகளை முன்னின்று செய்பவர்களாகவும் இருந்ததை அறிய முடிகிறது.

**பழங்களும் பானைகளும்**

மண்ணால் செய்யப்பட்ட கலன்களை குழிசி, குடம், தாழி, பானை, நெற்கூடு,போன்ற பல பெயர்களால் வழங்கியமையும் காணலாம்.

தலைவிதலைவனுடன் உடன்போக்கு மேற்கொள்ளும் விடியற்காலை நேரமானது பழுப்பதற்காக விளாம்பழம் போட்டு வைத்த பானையிலிருந்து மணம் கமழும் நேரம் என்பதை

**"விளம்பழம் கமழும் கமம்சூல் குழிசி"**
**(நற்- 12)**

என்று கூறுகின்றனர். குறிஞ்சித் தினையில் கபிலர்

**"முடமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம் (நற்- 353)**

என்ற பாடலில் மேகமூட்டம் தவழும் மலையில், முடம்பட்டுக் கிடக்கும் பலாமரத்தில் குடம் போல் பழுத்திருக்கும் பலாப்பழம் என்று கூறுகையில் பழுத்த பலா போன்ற பெரிய பானை என்று பானையின் அளவும் சமைப்பதற்கு ஏற்ற பக்குவமும் பெற்றது என்று அதன் தன்மையும் இங்கே சுட்டப்படுகிறது.

**ஐங்குறுநூற்றில் அழகிய பானைகள்**

அகப்பொருள் இலக்கியமான ஐங்குறுநூற்றில், சுடப்பட்டாத

ISBN. 978-93-5996-390-7

பசிய மட்கலமானது பழுத்த ஆலம்பழத்தைப் போன்று மென்மையானது என்ற கருத்ததை மிக அழகாக

**"புதுக்கலத் தன்ன கனிய வாலம்" (ஐங்குறு_ 303)** என்ற பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

**மண்பானையும் மாறாத அறிவியலும்.**

சங்க இலக்கியம் முதற்கொண்டே மண்பானைகள் பல அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக களிமண்ணின் தன்மை பற்றி பல இடங்களில் பேசப்பட்டுள்ளன.

பாலைத் திணையில் இளங்கீரனார் எனும் புலவர்

**"ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்**
**பெரு மழைப் பெயற்கு ஏற்றாங்கு"**

**(நற்- 308)** என்ற பாடலில் ஈர மண்ணில் செய்து காயவைத்திருக்கும் நீர்க்குடமானது பெருமழைநீரை ஏற்பது போல் கரைந்து மகிழ்ச்சியில் திளைப்பதாயிற்று என்று கூறுவதன் மூலம் காயவைத்த மண்பானை அதிகப்படியான நீரை உறிஞ்சும் தன்மை கொண்டது என்ற அறிவியல் உண்மையை நமக்குப் பறைசாற்றுகிறது.

**குயவனின் பானையும் குறுந்தொகைப் பாடலும்**

தலைவியின் பிரிவால் வாடும் தலைவன், அவளுடன் சேர்ந்திருக்கும் இன்பத்தைப் பற்றிப் பாடுகையில், சுடப்படாத பச்சைமண் பானை மழைநீரை ஏற்று ஊறிக் கரைவது போலத் தாங்க முடியாத ஆசை வெள்ளத்தில் நீந்திக் கரைகிறாய் நெஞ்சே எனும் செய்தியை

**"நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்**
**பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி,**
**அரிது அவாவுற்றனை நெஞ்சே! (குறுந்-29)**

என்று குறிஞ்சித் திணையில் ஔவையார் பாடுமிடத்தில் சுடப்படாத மண்கலம் மழைநீரில் கரைந்துவிடும் என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு அறிவியல் உண்மையை ஆழமாகப் பதிவுசெய்வதிலும் மண்பாண்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

**புறநானூறும் புதைக்கும் தாழியும்**

இது, ஈமச் சடங்குகளில் மட்பாண்டங்களின் முக்கியப் பங்கையும், குயவர்கள் ஈமச் சடங்குகளுடன் தொடர்பு கொண்டிருந்ததையும் காட்டுகிறது.

சங்க காலத்தில் மண்பாண்டத்தொழில் பரவலாக ஆக்கம்பெற்று இருந்தது. மேலும் மண்பாண்டங்களைச் செய்பவர் அதனைத் தனித்த தொழிலாக செய்துள்ளனர் எனவே அவர்களைக்

ISBN. 978-93-5996-390-7

'கலஞ்செய் கோ' என அழைத்து உள்ளனர்.

இதனை நாம் புறப்பொருள் இலக்கியமான புறநானூற்றில் பொதுவியல் திணையில் ஐயூர் முடவனார், சோழன் குளுமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப்பற்றிப் பாடுகையில்,

**"கலஞ்செய் கோவே! கலங்செய் கோவே!**
**இருள்தினிந் தன்ன குரூஉத்திறள்**
**பருஉப்புகை அகல் இரு விசும்பின்**
**ஊன்றுஞ் சூளை, நனந்தலை மூதூர்க்**
**கலஞ்செய் கோவே! (புறம் - 228)**

என்று பாடும் பாடலில் கிள்ளிவளவன் இறந்தப்பின். அவன் இறந்ததைத் தாங்கமுடியாத பலர் தம் உயிரை மாய்த்துக்கொண்டனர் .

அதுகண்ட புலவர் மிகப்பெரிய தாழி ஒன்று அவனுடன் சேர்த்துப் புதைக்க உதவும்வகையில் உன்னால் செய்யமுடியுமா? என்று அவனுக்குத் தாழி செய்யும் குயவனை வினவுகிறார்.

இறந்த உடலைத் தாழியில் இட்டுப் புதைக்கும் வழக்கம் தமிழர்களிடையே இருந்ததை இந்தப் பாடல் தெளிவுபடுத்துகிறது. இதன் மூலம் சமூகத்தில் மிகப்பெரிய பொறுப்புள்ள அங்கத்தினராக குயவர்களும் அவர்கள் செய்யும் தாழியும் இருந்திருக்கின்றன.

அதுமட்டும் அல்லாமல் மிகப்பெரிய அளவிலான தாழியைச் செய்யக்கூடிய ஆற்றல் மிக்கவர்களாகக் குயவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையும் நம்மால் உணரமுடிகிறது.

மேலும் பிரிவினை ஆற்றமுடியாத தலைவி புறநானூற்று பாடலில்

**"கலம்செய் கோவே! கலம்செய் கோவே!**
**அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய**
**சிறுவெண் பல்லி போல, தன்னொடு**
**சுரம்பல வந்த எமக்கும் அருளி,**
**வியல் மலர் அகன்பொழில் ஈமத் தாழி**
**அகலிதாக வனைமோ**
**நனந் தலை மூதூர்க் கலம் செய் கோவே!**
**(புறம்-256)**

என்ற பாடலில் ஊருக்கெல்லாம் பிணம் புதைக்கும் தாழி செய்துதரும் கோமகனே, பானை செய்யும் உன்சக்கரத்தில் ஒட்டிக்கொண்டுள்ள சிறிய வெண்ணிறப் பல்லி, சக்கரம் சுழலுமிடமெல்லாம் செல்லுமல்லவா?

அதுபோல என் காதலன் காட்டில் செல்லுமிடமெல்லாம் அவனோடு ஒட்டிக்கொண்டு நானும் சென்றேனே. அவன் இறந்த பின்னர் அவனைஇட்டுப் புதைக்கும் தாழியில் என்னையும் இடவேண்டும். இருவரையும் இடும் அளவிற்கு அகலமுள்ளதாக பிணத்தாழி செய்வாயா?

ISBN. 978-93-5996-390-7

என்று கேட்பதன்மூலம் பிரிவுத்துயர் தாங்கமுடியாத தலைவி தன் ஆற்றாமையை ஒரு குயவனிடத்தில் வெளிப்படுத்துவதையும் குயவர்கள் சக்கரத்தைப் பயன்படுத்தித் தாழிகள் செய்ததையும் நம்மால் உணர முடிகிறது.

மேலும் ஈமச்சடங்குகளில் மட்பாண்டங்களின் முக்கியப் பங்கையும் குயவர்கள் ஈமச்சடங்குகளுடன் தொடர்பு கொண்டிருந்ததையும் அறியலாம். மற்றுமொரு புறநானூற்றுப் பாடலான

**"வேட்கோ சிறாஅர் தேர்க்கால் வைத்த**
**பசுமண் குருஉத்திரன் போல" (புறம்- 32)**

என்ற பாடலில் நல்ல தொழில் நுட்ப அறிவுள்ள குயக்குலச் சிறுவர்கள் மண்பாண்டங்கள் செய்யும் சக்கரத்தில் வைத்த கனமான பசுமண் உருண்டையானது, குயவனின் கருத்துக்கேற்ப உருவெடுப்பதுபோல் சோழன் நலங்கிள்ளி எடுத்த முடிவுக்கேற்ப இந்தக் குளிர்ந்த மருதநிலத்தையுடைய நாடு அமைவது விளங்கும்.என்ற பொருள் அமைந்த பாடலின் மூலம் குயவர்கள் செய்யும் தொழிலானது தனிநபர் தொழில் அன்று.

அது குடும்பத்தின் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இணைந்து செய்யக்கூடிய ஒரு தொழிலாக இருந்திருக்கிறது என்பதும், குயவர்கள் கலையுடைய மண்பாண்டம் செய்யும் தொழிலை மிகுந்த நுட்பத்தோடும் ஆர்வத்தோடும் செய்யக்கூடியவர்கள் என்ற உண்மையும் நமக்குப் புலனாகிறது.

**ஐம்பூதங்கள் காட்டும் அகநானூறு**

இவ்வுலகமும் நம்முடலும் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களும் இணைந்த நிலையில் இருப்பதுபோல் குயவனால் வனையப்படும் மட்பாண்டங்களும் ஐம்பூதங்களும் அடங்கிய ஒன்றே.

மண்ணில் நீர்சேர்த்து பிசைந்து கலன்கள் செய்து அவற்றைக் காற்றிலும் வெய்யிலிலும் உலர்த்தி பின்நெருப்புச் சூளையில் இட்டுச் சுடுவர். இதனை

**"இலங்குமலை புதைய வெண்மழை கவை**
**இக்கலஞ்சுடு புகையில் தோன்றும்" (அகம்-308)**

என்ற பாடலின் வழி மண்ணால் செய்யப்பட்ட கலன்களைச் சூளையிலிட்டு கலன்களைக் கெட்டிப்படுத்தும் போது எழும் புகையானது மிகப்பெரிய மலைகளையே மறைத்துவிடும் என்பதன் மூலம் அறியலாம்.

**செல்லும் இடந்தோறும் செல்லும் பானைகள்**

அடிப்படைத் தேவையான உணவைச் சமைப்பதற்குப் பயன்படும் மட்கலனை

ISBN. 978-93-5996-390-7

மனிதன் செல்லும் இடங்களெல்லாம் எடுத்துச் சென்றான் என்பதை

**"கடைகோல் சிறுதீ அடைய மாட்டித்**
**திண்கால் உறியன்பானையன்**
**அதளன்"(அகம்- 274)**

என்ற பாடல் வழி அறியலாம். சங்ககால மகளிர் நீர்த்துறையிலிருந்து நீர் கொண்டுவர அழகிய நுட்பமான வேலைப்பாடுடைய பானைகளைப் பயன்படுத்தினர் என்பதை

**"மகளிர் நுண்செயல் அம்குடம் இரீஇப்"(அகம்-336)** என்ற பாடல் வழி அறியலாம். பானையும் பருத்திச் செடியும் பழங்காலத்தில் செடி கொடிகளையும் பருத்தியையும் ஜாடிகளிலும் தாழிகளிலும் வளர்த்தனர் என்பதையும் செடிவளர்ப்பதில் பெண்கள் ஆர்வமுள்ளவர்கள் என்பதையும்,

**"தாழியும் மலர்பல அணியா"(அகம்- 369)**
**"தாழிக் குவளை வாடுமலர் சுட்டி"(அகம்-165)**
**தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்தி(அகம்- 129)** என்பதன் வழி அறியலாம்.

**முடிவுரை**

சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகையில் பழந்தமிழரின் வாழ்வியலும் வாழ்வியலுக்கு ஏற்ற சூழல்களும் அதனோடு இணைந்த மட்பாண்டங்களும் மட்பாண்டங்களைப் படைத்தளித்த குயவர்கள் பற்றியும் இக்கட்டுரை நமக்கு விளக்குகிறது.